Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 72
செவ்வாய்க்கிழமை
06 பெப்ரவரி 2024
தை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கல்வியமைச்சருக்கே ஒழுங்கா கொடியேத்தத் தெரியேலை எண்டா நாட்டின்ர நிலையை நினைச்சுப் பாருங்கோவன்"

# சபாநாயகர் மீது விரைவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## எதிர்க்கட்சிகள் தீவிரம்



**கொழும்பு, பெப்ரவரி 6**

**சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் கொண்டுவரப்படும் எனவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இதற்கான முன்னெடுப்புகள் இடம்பெற்று வருகின்றன என்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

11

பொலிஸாரின்

## அடக்குமுறைக்கெதிராக ஒன்றிணையவேண்டும்!!

### யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 6

சுதந்திரத்தின் அர்த்தத்தினைக் கேலிக்கூத்தாக்கும் அரசாங்கத்தால், கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக அனைவரும் இன, மத, மொழி, பிராந்திய வேறுபாடின்றிக் குரல் கொடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

11



## அநுர – ஜெய்சங்கர் சந்தித்துப் பேச்சு!

புதுடில்லி, பெப். 6

ஜே.வி.பி.யின் தலைவரும், அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இருவரும் புதுடில்லியில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

11

## பிணை!

கொழும்பு, பெப். 6

கட்டுநாயக்க கொழும்பு அதிவேக வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் சாரதி வெலிசர நீதிவான் நீதிமன்றத்தால் பிணை

11

## தலைகீழாகத் தேசியக்கொடி; ஏற்றினார் கல்வியமைச்சர் சுசில்

### யாழில் சம்பவம்



யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாட்டின் தேசியக் கொடியை தலைகீழாக ஏற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தொழில்நுட்பப் பீடம் தொடர்பான வைபவத்துக்காகச் சென்றபோதே அமைச்சர் அங்கு தேசியக் கொடியைத் தலைகீழாக ஏற்றியுள்ளார். எனினும், தேசியக் கொடி தலைகீழாக ஏற்றப்படுவது உடனடியாக அவதானிக்கப்பட்டு அது கீழிறக்கப்பட்டு மீண்டும் ஏற்றப்பட்டது. (ம)

## பொலிஸார் தாக்கினர் என்று ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 6

வட்டுக்கோட்டைப் பொலிஸார் தன்னைத் தாக்கினார்கள் என்று தெரிவித்து, இளைஞர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார்.

11

## விபத்தில் மருத்துவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், பெப். 6

பருத்தித்துறை மருதடிப் பகுதியில் வாகனமொன்றும் மோட்டார்

11

## நிமோனியாவால் பெண் சிசு பலி!

நிமோனியாக் காய்ச்சல் காரணமாக பெண் சிசுவொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

ரகுராம் சாந்திரா என்ற 14 மாதங்களேயான அந்தப் பெண் சிசு இரண்டு நாள்களாகக் காய்ச்சலால் அவதிப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்ட அந்தச் சிசு, அன்றையதினமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்
சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை
ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728 • இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை
RHINO 60 YEARS www.rhino.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விவசாயிகளுக்கு ரூபா 15 ஆயிரம்!

கொழும்பு, பெப். 6

எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரெயருக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உரக்கொள்வனவு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 9.6 பில்லியன் ரூபா வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# புதிய தலைமையே நாட்டுக்குத் தேவை

### கொழும்புப் பேராயர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.6**

**இலங்கை புதிய தலைமைத்துவத்துக்கு மாற வேண்டும் என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் தலைமைத்துவம் மதம், மொழி அடிப்படையில் சமூகங்களைப் பிரித்துள்ளது. ஆனால் சிங்கப்பூர் மக்களின் நலத்துக்கும், ஐக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து இப்போது வளர்ச்சியடைந்துள்ளது. சிங்கப்பூரில் உள்ள வலுவான சட்ட அமைப்பு ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

இலங்கை அரசாங்கம் தேசிய நலனை விடவும், தனிப்பட்ட நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. தேசம் ஒடுக்குமுறைமிக்க ஆளும்வர்க்கத்தின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும்.

நாட்டையும், மக்களையும் நேசிக்கும் தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் - என்றார். (எ-இ)

## ஆதரவு யாருக்கு? தீர்மானமில்லை

சு.க. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 6

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் இன்னமும் எந்தமுடிவும் எடுக்கப்படவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

சுதந்திரக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால இதுதொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட உள்ள புதிய அரசியல் கூட்டணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவை பொய்யான தகவல்களே.

சுதந்திரக்கட்சியின் தலைமையில் உருவாக்கப்படும் அரசியல் கூட்டணியானது நாட்டின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானகரமான வலுவான கூட்டணியாக இருக்கும் - என்றார். (ச-இ)

## இலங்கை வலுசக்தியை இந்தியா ஆக்கிரமிக்கும்

### விமல் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.6

இலங்கையின் சக்திவலுவின் சுயாதீனத்தை வெகுவிரைவில் இந்தியா ஆக்கிரமிக்கும். பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக்கொண்டு நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன. -இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

"ஜனாதிபதிக்கு பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் கிடையாது. நெருக்கடிகளை தீவிரப்படுத்தி மேற்குலகத்தை மகிழ்விக்க முயற்சிக்கிறார்.

இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. அத்துடன் மன்னார் காற்றாலையின் பெரும்பாலான பங்கு மற்றும் இலாபமடையும் ரெலிக்கொம் நிறுவனம் ஆகியவற்றை இந்தியாவின் அதானி நிறுவனம் ஆக்கிரமிக்கிறது.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடுகள் பெரும் நெருக்கடிகளை நாட்டுக்கு ஏற்படுத்தும் - என்றார். (ச-இ)

# ரணில் ஜனாதிபதி சந்திரிகா பிரதமர்

### 'டீலுக்கு' ஆலோசிக்கும் சு.க.

கொழும்பு, பெப்.6

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் பதவிக்கு முன்னிறுத்தும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய அரசியல் கூட்டணி தற்போதைக்கு ஓரளவு இறுதிசெய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்தக் கூட்டணி தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் நாள்களில் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தில் உள்ளது என்று கூறப்படுகின்றது.

ரணிலுக்கு ஆதரவளித்து, அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், பிரதமர் பதவியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கவேண்டும் என்பது இந்தக் கூட்டணி சார்பில் நிபந்தனையாக முன்வைக்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

# கந்தகாட்டில் மீள மோதல்!

கொழும்பு, பெப்.6

வெலிகந்த - கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் சிப்பாய் ஒருவர் உட்பட 10 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த மோதல் தொடர்பில் 34 பேர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இந்தப் பின்னணியில் வெலிகந்தகந்தகாடுபுனர்வாழ்வுநிலையத்திலிருந்து 16 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (ச-இ)

## குடும்ப அரசியலை முடிக்கவேண்டும்!

### அநுரகுமார அழைப்பு



அடுத்த தேர்தலில் 98 வருட அரசியல் முடிவுக்கு கொண்டு வரப்படவுள்ளது. எதிர்காலத்தில் தந்தையிடத்தில் இருந்து மகனுக்கும் மகனிடத்திலிருந்து தந்தைக்கும் வழங்கப்படும் அரசியலை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

"நாம் புதைக்கப்படலாம். அவ்வாறு இல்லையென்றால் புதிய பாதையில் சென்று அனைவரும் எழுந்திருக்க முடியும். படுகுழியில் விழுவதை விடுத்து புதிய பாதையில் எழுச்சி பெறுவோம் என அழைப்பு விடுக்கிறேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## புலிகளும் கூட்டமைப்பினருமே இலங்கையை நாசமாக்கினர்

### கூறுகிறார் மஹிந்த அமரவீர



கொழும்பு, பெப்.6

புலிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த நாட்டை நாசமாக்கியது. அதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது என்று கூறியுள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நாட்டை ஆளாவிட்டாலும் நாட்டை நாசமாக்கிய ஒரு கட்சியாகும். தற்போது ஜனநாயகப் போர்வையைப் போர்த்துக்கொண்டு வந்திருந்தாலும் படுகொலைகளுடன் தொடர்புடைய ஒரு கட்சியாகும்.

புலிகளுடன் இணைந்து நாட்டில் பேரழிவுகளை ஏற்படுத்தினார்கள். இது இரகசியம் அல்ல. ரில்லியன் கணக்கான சொத்துகள் அழிக்கப்பட்டன. நாட்டின் பொருளாதாரம் பின்னோக்கி இழுக்கப்பட்டது. அதை மறந்துவிடக் கூடாது. ஜே.வி.பி.யும் அவ்வாறுதான். இப்போது நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைகின்றனர். அதைப்போன்று நாட்டை மீட்கவும் ஒன்றிணையவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## காலாவதிப் பொருள்கள் அராலியில் பறிமுதல்

யாழ்ப்பாணம், பெப். 6

அராலி மத்தியிலுள்ள சில கடைகளில் காலாவதியான பொருள்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டன.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரிபணிமனையின் கீழுள்ள அராலி மத்தியிலுள்ள கடைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர்ச் சோதனைக்குட்படுத்தியபோதே அவை கண்டறியப்பட்டன. அதனையடுத்து காலாவதியான பொருள்களை வைத்திருந்த உரிமையாளர்கள் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப் பட்டனர். (ச-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி அச்சத்தை ஏற்படுத்தி தரமற்ற மருந்து இறக்குமதி!

## கெஹலிய தொடர்பான வழக்கில் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் தகவல்

**கொழும்பு, பெப்.6**

**மருந்துத் தட்டுப்பாடு தொடர்பான போலியான அச்சத்தை அமைச்சரவையில் ஏற்படுத்திய முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதைப் பயன்படுத்தி தரம்குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்தார் எனப் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.**

2022ஆம் ஆண்டு மே 30ஆம் திகதி மருந்து தட்டுப்பாடு காரணமாக நாட்டின் சுகாதாரத்துறை மூன்று வாரங்களுக்குள் வீழ்ச்சியடையும் என அமைச்சரவையின் முன்னாள் அமைச்சர் அச்சத்தை ஏற்படுத்தினார். அதைப்பயன்படுத்தி தரம் குறைந்த மருந்துகளை அரசாங்க மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்தார் என்று பிரதிசொலிசிட்டர் ஜெனரல் மாளிகாகந்த நீதிவான் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடன் உதவியில் எஞ்சியிருந்த நிதியை கூடிய விரைவில் பயன்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை வகுக்க வேண்டும் என்று அவர் விடுத்த வேண்டுகோளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஏற்றுக் கொள்ள மறுத்ததைத் தொடர்ந்தே சந்தேக நபர் இவ்வாறு நடந்துகொண்டார் என்றும் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இவற்றை ஆராய்ந்த நீதிவான் இந்தியக் கடனுதவியைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து மருந்துகள் தொடர்பாகவும், உள்ளூர் மருந்து விற்பனையாளர்கள் விநியோகித்த மருந்துகள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுக்க உத்தரவிட்டார். (எ-இ)



## உடைமையில் ஐஸ் இளைஞன் கைது!

புதுக்குடியிருப்பு, தேராவிலில் இளைஞர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 21 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் 23 வயதுடையவர் என்றும், அவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சந்தேகநபரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது நீதிமன்றம். (எ-19)

## உடைமையில் ஹெரோய்ன் இளைஞர் கைது

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுழிபுரத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். 20 வயதான சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிராம் 5 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## ஐவர் சுட்டுக்கொலை மேலுமொருவர் கைது

கொழும்பு, பெப்.6

பெலியத்தவில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொலைகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## 667 பேர் கைது

கொழும்பு, பெப்.6

நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் 'யுக்திய' நடவடிக்கையின்போது நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 667 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 559 சந்தேக நபர்களும், பொலிஸாரால் தேடப்பட்டுவரும் பட்டியலில் இருந்த 107 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## பாண் எடை சரியா? வலைவீச்சு ஆரம்பம்



கொழும்பு, பெப். 6

பாண் எடை குறித்து வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய பாண் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதைக் கண்டறியும் சுற்றிவளைப்புகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒரு இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 450 கிராமாகவும் அரை இறாத்தல் பாண் பரிந்துரைக்கப்பட்ட எடை 225 கிராமாகவும் இருக்கவேண்டும் என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பாண் விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## புதினம் தெரியுமோ?

இரவல் சீலையில கொய்யகம் கட்டுறது தான் இப்ப நல்லா எடுபடுகுது. அப்பிடி இரவல் ஆக்களை யாழ்ப்பாணத்துக்கு வாகனங்களில் அள்ளிக் கட்டிக்கொண்டு வந்து, சுதந்திரதினத்தை 'பெருமெடுப்பில' கொண்டாடினதா ஒரு கஞ்சாக் கும்பல் படம் காட்ட வெளிக்கிட்டது. வாயைத் திறந்தாலே நஞ்சைக் கக்கிற சரத் வீரசேகர மாதிரி அவைக்கு எலும்புத்துண்டு போடுறவையைக் கூட்டிக்கொண்டு வந்து, வீரசிங்கம் ஹோல் முழுக்க சோத்துப் பார்சலுக்கும், ஐயாயிரம் ரூபா காசுக்கும், அரைப்போத்தில் சாராயத்துக்கும் வந்த கும்பலைக் கொண்டு நிறைச்சு 'பாத்தியளே எங்கட பவரை?' எண்டு அந்த எடுபிடிக் கும்பல் தங்களைத் தாங்களே பாராட்டியுமிருக்குது.

உங்கட காசு, உங்கட பார்சல், உங்கட சாராயம். என்னவும் செய்திட்டுப் போங்கோ. ஆனால் இப்பிடி வித்தை காட்டுறனெண்ட பேரில இஞ்சையிருக்கிற சனத்துக்கு இடைஞ்சல் குடுக்கிறதுதான் கடும்பிழை. காய்ஞ்சமாடுகள் கம்பில விழுந்தமாதிரி பஸ்ஸில ஏறிவந்த ஆக்களுக்கு என்ன செய்யிறது எண்டு தெரியேலை. அதுகள் கண்டபடி கத்திக்குளறிக்கொண்டு றோட்டை அடைச்சபடி அலையத் தொடங்கிட்டுதுகள். அதைவிட உந்த வாள்வெட்டு, கஞ்சா கடத்தல் செய்யிற கோஷ்டியும் மோட்டார் சைக்கிள்ள வந்து பெரிசாக் ஹோர்ன் அடிச்சபடியே றோட்டு முழுக்க ஓடுறதும், அதால போய்வாற சனத்துக்கு முன்னால போய் திடீரெண்டு மோட் டார் சைக் கிளை வெட்டி எடுக்கிறதுமா பெரும் கூத்துக் காட்டிச்சினம்.

அதைவிட இன்னொரு விசயம் நடந்தது. தமிழ்ச்சனம் தான் இந்தச் சுதந்திரதினத்தை மனப்பூர்வமாக் கொண்டாடுகினமாம் எண்டு காட்டுறதுக்காக ஒரு பத்துப்பதினைஞ்சு சின்னப்பெடியளுக்கு பச்சை நிறத்தில வேட்டியைத் தாறுபாய்ச்சிக் கட்டி, காவடி ஆட விட்டவை. அந்தப் பெடியளுக்கு பதினைஞ்சு வயதுக்குள்ளதான் இருக்கும். அதுகளுக்கு காவடி எண்ட பேரில பெரிய கம்பியில செய்த அலகு குத்திப்போட்டு, உந்த வெயிலுக்க தார் றோட்டுல ஆடப்பண்ணிக் கொண்டுதான் வந்தவை. சிலர் தங்களுக்கு பவர் இருக்கெண்டு மேலிடத்துக்கு காட்டி, காசு வாங்கிறதுக்காக இப்பிடிச் சின்னப்பிள்ளையளை கம்பியால வாயில குத்துறதும், கொளுத்திற வெயிலுக்க செருப்புமில்லாம நடத்திக் கூட்டிக் கொண்டு வாறதும் கடும் சிறுவர் துஷ்பிரயோகம். ஆனால் இதுகளையும் பிடிக்கவேண்டிய பொலிஸ்காரரே இந்தப் பேரணிக்கு பாதுகாப்புக் குடுக்கேக்க, அவைக்கு எதிரா ஆர்தான் முறைப்பாடு குடுக்க முன்னுக்கு வருவினம்? இப்பிடி பிள்ளையளை வதைச்சு, இரவல் ஆக்களை இறக்கி சுதந்திரதினம் கொண்டாடுறதுக்குப் பதிலா நாலுசனத்துக்கு ஏதும் உதவிப்பொருள் குடுத்திருந்தாலும் புண்ணியமாப் போயிருக்கும். இப்பிடிச் சொந்தக்காசிலையே சூனியம் வைச்சு சுதந்திரதினத்தை கெடுத்திட்டினமே.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானுடன் டெஸ்ட்; ஊதித்தள்ளியது இலங்கை!

**கொழும்பு, பெப்.06**
**ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை , வெறும் நான்கே நாள்களில் வென்றது இலங்கை யணி.**

இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் அணிக்கும், இலங்கை அணிக்கும் எதிரான இந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டி , கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணித் தலைவர் தனஞ்செய டி சில்வா, முதல் ஆப்கான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். ஆப்கானிஸ்தான் அணியில் ரஹ்மட் ஷா மட்டுமே இலங்கையணியின் பந்துவீச்சுக்குத் தாக்குப் பிடித்தார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். முதல் இன்னிங்ஸில் ஆப்கான் அணி 198 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இலங்கையணி சார்பில் பந்துவீசிய விஸ்வ பெர்னாண்டோ 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.




பதிலளித்து ஆடிய இலங்கையணி, அஞ்சலோ மத்யூஸ், சந்திமால் ஆகியோரின் அபார சதங்களின் துணையால் சகல விக்கெட்டுகளையும் இழந்து 439 ஓட்டங்களைக் குவித்தது.
அஞ்சலோ மத்யூஸ் 141 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் 107 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 77 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பில் நவீட் ஸர்டான் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்ஸில் நிதானமாக ஆடிய ஆப்கான், விக்கெட்டுகளை விழவிடாமல் பார்த்ததோடு இணைப்பாட்டங்களையும் வலுவாக்கத் தொடங்கியது. இதனால் இலங்கை அணிவீரர்கள் ஆப்கான் அணியின் விக்கெட்டுகளை வீழ்த்தமுடியாமல் திணறினர். மூன்றாம் நாள் ஆட்டமுடிவில் ஆப்கானிஸ்தான் அணி 199 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டை மாத்திரமே பெற்றிருந்தது.
நேற்று நான்காம் நாள் இலங்கை அணி தனது வியூகத்தை மாற்றியது. இதனால் முதலில் பலமான நிலையில் இருந்த ஆப்கானிஸ்தான், பின்னர் மளமளவென விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கியது. இறுதியில் 296 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் அந்த அணி பறிகொடுத்தது.
ஆப்கானிஸ்தான் சார்பில் இப்ராஹிம் ஸர்தான் 114 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றிருந்தார்.
இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜெயசூரிய 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். வெற்றிக்கு வெறும் 56 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில் இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி அந்த இலக்கைத் தொட்டு, போட்டியையும் தொடரையும் வென்றது.
ஆட்டநாயகனாக இரண்டு இன்னிங்ஸிலுமாக மொத்தம் 8 விக்கெட்டுகளை கைப்பற்றிய பிரபாத் ஜெயசூரிய தெரிவானார். (அ)



# அமைச்சரவையில் கெஹலிய 'அவுட்'?

கொழும்பு, பெப்.6
அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை அமைச்சரவையில் இருந்து நீக்குவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டம் கவனம் செலுத்தியுள்ளது என்று தெரியவருகின்றது.
முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல தற்போது சுற்றாடல் அமைச்சராகப் பதவி வகிக்கின்றார். சுகாதார அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் தரமற்ற மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கடந்த 2ஆம் திகதி கெஹலியவைக் கைது செய்திருந்தது.
கடந்த மூன்றாம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட கெஹலிய ரம்புக்வெலவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
மோசடிச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் உள்ள ஒருவரைத் தொடர்ந்தும் அமைச்சரவையில் வைத்திருப்பதன் மூலம் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படக்கூடும் என்று பல்வேறு தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. அதையடுத்து அமைச்சர் பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெலவை நீக்குவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது என்று உயர்மட்ட அரசாங்க வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது. (எ-இ)

# கொலைச் சம்பவங்களில் படையினருக்கும் தொடர்பு

*கட்டுப்பாடுகளை விதிக்கத் தீர்மானம்*

கொழும்பு, பெப்.6
பாதாள உலகக்குழுக்களால் மேற்கொள்ளப்படும் கொலைகளுடன் சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப்படை உறுப்பினர்களுக்குத் தொடர்பு உள்ளமை தெரியவந்துள்ளதை அடுத்து, படைமுகாம்களில் இருந்து துப்பாக்கிகளை வெளியில் எடுத்துச் செல்வது தொடர்பாகக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.
ஆயுதக் களஞ்சியத்துக்குப் பொறுப்பாளர்களை நியமிக்கும்போது, அவர்கள் தொடர்பாகக் கூடுதல் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களின் நடத்தைகள் தொடர்பில் கடுமையான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன என்றும், சைபர் கண்காணிப்பு முறை ஊடாகப் படையினரின் சந்தேகத்துக்குரிய செயல்கள் கண்காணிக்கப்படுகின்றன என்றும் தகவல் வெளியாகியுள்ளது.
அண்மையில் நடந்த கொலைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படும் படையினர், பொருளாதார சிரமங்கள் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளதன் காரணமாகவே பாதாள உலகக்குழுக்களுடன் தொடர்புபட்டுச் செயற்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். சின்னச் சின்ன விவாதங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். புதிய முயற்சிகளில் மட்டும் கூடுதல் கவனம் தேவை.

**இடபம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது. செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபா ரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம். இன்று சிவபெருமானை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தருவார். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர் பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை ஏற்படும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரமும் தண்டனையும்

நேரம் பொன்னானது என்பார்கள்.. இன்றைய உலகில் ஒவ்வொருவரும் ஒரு அவசரத் தனத்துடனேயே இயங்கிக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நிமிடத்தையும், ஒவ்வொரு செக்கனையும் வீணாக்காது தாவிச் சென்றுவிடவே முயற்சிக்கின்றோம். ஒரு நிமிடம் முந்திச் செல்வது மட்டுமல்ல சில சந்தர்ப்பங்களில் ஒரு நிமிடம் பிந்திச் செல்வதும் நன்மை பயக்கும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிதல் இன்மையே வடக்கில் நடக்கும் ரயில் விபத்து உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருக்கின்றது. நாட்டின் ஏனைய இடங்களை விடவும் ரயிலில் மோதி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை வடக்கில் உயர்வாகவே இருக்கின்றது. பாதுகாப்பற்ற ரயில் கடவைகளால் ஏற்படும் விபத்துகளைத் தாண்டி ரயில் போக்குவரத்தின் அனுபவமற்ற தன்மை - அவசரத்தன்மை என்பனவே பெரும்பாலான விபத்துகளுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. ரயில் கடவைகளில் காத்திருக்கும் பொறுமை இல்லாது - அறிவுறுத்தல்களை மதிக்காது செயற்பட்டு, உயிரிழந்தவர்கள் பலர். சில நாள்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் நடந்த விபத்துக்கும் இந்தப் பொறுமையின்மையே காரணம்.

இலங்கையில் பொதுமக்கள் பெரும்பாலும் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை. இதற்குக் காரணம் மேற்கத்தேய நாடுகளில் காணப்படும் இறுக்கமான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இலங்கையில் இல்லாமையே. போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு விதிக்கப்படும் தண்டனைகளும் குறைவாகவே இருக்கின்றன. ரயில் விபத்துகளில் பெரும்பாலானவைக்கு ரயில் கடவைகளைக் கடக்கும்போது அவதானமின்றிச் செயற்படுவதும், ரயில் கடவைச் சமிக்ஞைகளை மதிக்காது செயற்படுவதும் பிரதான காரணங்களாக இருக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் மூடப்பட்டிருந்த ரயில் கடவைக்குள் ஒருவர் நடந்து சென்று தண்டவாளத்தைக் கடப்பதும், அதனைக் கண்ணுற்ற மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது, ரயிலிலுடன் மோதுவதும் அங்கே இருந்த கண்காணிப்புக் கமெரா ஒன்றில் பதிவாகியிருக்கின்றது.

இவ்வாறான விதிமீறல்களை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலேயே இவ்வாறான உயிரிழப்புகளைத் தடுக்க முடியும். பிரதானமான இடங்கள், கடவைகளில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்துவதன் ஊடாகவோ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான முறைமைகள் மூலமோ கண்காணிக்கும் செயன்முறை உருவாக்கப்படுவது அவசியம். ரயில் விபத்துகளில் மட்டுமல்லாது போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்துவன் ஊடாக எந்தளவுதூரம் இந்த விபத்துகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பது தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் ஆராய வேண்டும். பிறநாடுகளில் விபத்துகளைக் குறைப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளன என்பது தொடர்பாகவும் சிந்தித்து நடவடிக்கை எடுப்பது அவசியமாகின்றது. தண்டனைகள் கடினப்படும் போது குற்றங்களும் குறையும்.



# வரி எண் திட்டத்தில் நடைமுறைச்சிக்கல்!

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆளணி, நிதியின்றித் தடுமாற்றம்

**கொழும்பு, பெப்.6**

**18 வயது நிரம்பிய ஒவ்வொருவருக்கும் வரி எண் வழங்கவேண்டும் என்ற அரசின் தீர்மானம் பிற்போடப்படும் சாத்தியம் உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்தவிடயம் எதிர்பார்த்ததை விடக் கடினமானது என்றும், அதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்றும் 'சண்டே டைம்ஸ்' வார இறுதிப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முறையை நடைமுறைப்படுத்துவதற்கு 2.5 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நிதியமைச்சுக்கு அறிவித்துள்ளது. முக்கியமாக, 'ரின்'எனப்படும்வரிஎண்ணைபெறுவதற்குத் தகுதியானவர்களுக்குத் தபாலில் அனுப்ப வேண்டியுள்ளது. அதற்கான தபால் கட்டணத்துக்காக பெருந்தொகை செலவாகும்.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மனிதவளம் தங்களிடம் இல்லை என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு வேலையில்லாப் பட்டதாரிகளை ஆயிரத்து 500 ரூபா நாள் சம்பள அடிப்படையில் தற்காலிகமாக சேவைக்கு இணைத்துக்கொள்வது பற்றி ஆலோசிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வருடகாலம் தேவைப்படும் என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-6)

# பாடசாலை ஆரம்பம்

அரச மற்றும் அரச அனுசரணையில் இயங்கும் தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகின.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகவிருந்த கற்றல் செயற்பாடுகள், உயர்தரப் பரீட்சை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# வீட்டுக்காவலில் குற்றவாளி இந்த ஆண்டு நடைமுறை

கொழும்பு, பெப். 6

சிறு குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை வீட்டுக்காவலில் வைக்கும் வேலைத்திட்டம் இந்த ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகாரங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் அனுருத்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

# 106 புற்றுநோயாளர்கள் நாட்டில் நாளாந்தம் பதிவு

இலங்கையில் நாளாந்தம் 106 புதிய புற்றுநோயாளர்கள் புதிதாகக் கண்டறியப்படுகிறார்கள் என்று புற்றுநோய் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் குழந்தைப் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 900 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)

# இலங்கை – தாய்லாந்து; விசா இன்றிய பயணம்?

கொழும்பு, பெப். 6

பொருளாதாரத் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் விசா இல்லாமல் பயணம் செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படுகிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தகத்தில் கையெழுத்திட்டதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். அதேவேளை இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான கலாசார மற்றும் பௌத்த சுற்றுலாவை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ச-இ)

**நாளை**

07.02.2024

**புதன்கிழமை**

**தை – 24**

சுபநேரம் : 05.05 – 06.35

ராகுகாலம் : 12.35 – 02.05

**பிதேதோஷ விரதம்**

**நாளொரு நல்வார்த்தை**

**சமமற்ற விடயங்களை சமப்படுத்த முயற்சிப்பதே சமத்துவமின்மையின் மோசமான வடிவம்.**

**- அரிஸ்ரோட்டில் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறைக்கைதிகள் விடுவிப்பு

வவுனியா, பெப்.6

நாட்டின் 76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு நாடு பூராகவும் சிறைச்சாலைகளிலிருந்து ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 600 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.


வவுனியா சிறைச்சாலையிலிருந்து சிறு குற்றங்கள் புரிந்து குறுகிய காலசிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 12 கைதிகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். (ப-18)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி, கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் குறித்த நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

தலைவராக க.பாலசிங்கம், உபதலைவராக மா.நகுலேஸ்வரன், செயலாளராக ப.விஜயகுமாரன், உபசெயலாளராக இ.பிரதீபன், பொருளாளராக ற.ரனிஷ்ரன், நிர்வாக உறுப்பினர்களாக மா.மகேஷ்வரன், இ.கந்தசாமி, ச.ஜெயக்குமார், பொ.செல்வராசா, செ.மதிசிங்கம், இ.சிவகாந்தன், போஷகர்களாக க.சிவஞானம், வே.சின்னத்தம்பி, எண் பரிசோதகராக சி. தங்கராஜா ஆகியோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (ப-9)



ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் நீண்டகாலமாகப் பழுதடைந்திருந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம், சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் மீளவும் சீரமைக்கப்பட்டு பாவனைக்காகக் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது. (ப-66)

# வட்டு. இன்பசோலை வீதியை சீரமையுங்கள்

### பிரதேசமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.6

**கர்ப்பிணிப் பெண்கள் உட்படப் பலரும் பயணிக்கமுடியாது அவதியுறும் வட்டுக்கோட்டை தெற்கு இன்பச்சோலை வீதியைப் புனரமைத்துத் தர உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

சங்கானைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டினர்.

வட்டுக்கோட்டை தெற்கு இன்பச்சோலையிலிருந்து பிரதான வீதியை அடைய 3 கிலோமீற்றர் தூரம் எடுக்கும். நாளாந்தம் இந்த வீதியை பல தேவைகளுக்காக மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த மழையின்போது இந்த வீதியூடாக அம்புலன்ஸ் கூடப் பயணிக்க முடியாத இடர்நிலை ஏற்பட்டது. எனவே அடுத்த மழைக்கு முன்னராவது குறித்த வீதியை சீரமைத்துத் தர அதிகாரிகள் நடவடிக்கை எடுங்கள் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில், "குறித்த வீதியை மாகாண சபை மூலமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (ச-125)

## நீண்டகாலம் திருத்தப்படாத மந்துவில் கிராம உள்வீதிகள்

முல்லைத் தீவு, பெப்.6

முல்லைத்தீவு, மந்துவில் கிராமத்தின் உள்வீதிகள் புனரமைக்கப்படாததால் கிராமமக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

700 வரையான குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் நீண்டகாலமாக வீதிகள் புனரமைக்கப்படவில்லை. அதனால் மாணவர்கள் நீண்டதூரம் பாடசாலைக்குச் செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். கிராமத்தின் வீதிகளைப் புனரமைத்துத் தரவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## யாழ்.பாடசாலைகளில் புகை அடிக்கும் பணி

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்.மாநகர பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் நுளம்புகளை விரட்டுவதற்காக புகை அடிக்கும் பணிகள் இரு நாள்கள் முன்னெடுக்கப்பட்டன. விடுமுறைக்குப் பின்னர் பாடசாலைகள் ஆரம்பமாவதையொட்டி இந்தப் பணிகள் இடம்பெற்றன. (ச-17)

## சிறுகதைப் போட்டி

கொழும்பு, பெப்.6

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து 'தாயக ஒலி' பிரதம ஆசிரியர் தம்புசிவாவின் அமுதவிழாவை முன்னிட்டு சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளன.

இந்தப் போட்டி இருபிரிவுகளாக நடத்தப்படும். போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்த படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பாடசாலை மாணவர்களுக்கான படைப்புகள் யாவும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

படைப்புகளை பெப்ரவரி 25 ஆம் திகதிக்கு முன்பாக இணைப்பாளர், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இல.92/1 நெல்சன் பிளேஸ், கொழும்பு - 6. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்றும், மேலதிக விபரங்களுக்கு 0112364124 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ய)

## டெங்குத் தாக்கம் குருநகரில் உயர்வு

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் டெங்குத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிகை அதிகரித்துள்ளது.

அதனையடுத்து அங்கு டெங்குக் கட்டுப்பாட்டு சோதனை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். அத்துடன் குறித்த பிரதேசத்தில் நுளம்புகளை விரட்டும் பணிகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் சேவை

சாவகச்சேரி, பெப்.6

சாவகச்சேரி பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் தமது நிறுவை, அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடலுக்கான நடமாடும் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் எதிர்வரும் 6, 7, 8, 9 ஆகிய திகதிகளிலும், கொடிகாமம் பஸ் தரிப்பு நிலையம் முன்பாகவுள்ள சாவகச்சேரி பிரதேசசபையின் பொது மண்டபத்தில் 12,13,14 ஆகிய திகதிகளிலும், கைதடிச் சந்தியில் அமைந்துள்ள கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் 15,16 ஆகிய திகதிகளிலும் காலை 9 மணி முதல் மாலை 2 மணிவரை முத்திரையிடலுக்கான நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)

# குரங்குகளின் அட்டகாசம் விசுவமடுவில் அதிகரிப்பு!

### கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.6

முல்லைத்தீவு, விசுவமடுவில் குரங்குகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விசுவமடு காட்டுப்பகுதியிலிருந்து பயிர்ச்செய்கை நிலங்களுக்கு வருகின்ற குரங்குகளால் பெருமளவில் பயிர்கள் அழிக்கப்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் குரங்குகளை விரட்டுவதற்கு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ப-13)



# முல்லைத்தீவு நகரத்தை பசுமையாக்கத் திட்டம்

முல்லைத்தீவு, பெப்.6

முல்லைத்தீவு நகரத்தைப் பசுமையான நகரமாக மாற்றுவதற்கான திட்டத்தின் அடிப்படையில் தற்போது 5 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர் சி.குணபாலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் முல்லைத்தீவில் ஏற்பட்ட போராலும், ஆழிப்பேரலையாலும் பெருமளவு மரங்கள் அழிவடைந்துள்ளன. இதனால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் கரைதுறைபற்று பிரதேச செயலகக் கூட்டங்களில் முல்லைத்தீவில் மரம் நடுவதன் முக்கியத்துவம் தொடர்பான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போது 5 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய்த் திருடர்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் தேங் காய்த் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பிர தேச மக்கள் தெரிவித்துள்ள னர்.

வெற்றுக்காணிகளிலுள்ள தென்னைகளிலேயே இரவு வேளைகளில் திருடர்கள் கைவரிசையைக் காட்டுகின்றனர் என்றும் அவர்கள் விசனம் தெரி வித்துள்ளனர். (ச-17)

## பாகிஸ்தானுக்கு உளவு; இந்தியர் ஒருவர் கைது

புதுடில்லி, பெப்.6

பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ. அமைப்புக்காக உளவு பார்த் தார் என்ற குற்றச்சாட்டில் இந்திய வெளி விவகார அமைச்சு ஊழியர் ஒருவரை உத்தரப் பிரதேச மாநில பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய் துள்ளனர். (எ-இ)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

உடுவில் பகுதியில் குறித்த தொகை பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் பணத்தின் தொகையையும், பயணித்த பாதை விபரங்களையும், தவறவிட்ட திகதியையும் அறிவித்து பணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

075 316 8710

## நன்றி தெரிவிக்கின்றோம்

கடந்த 28.01.2024 உதயன் பத்திரிகையில் வெளிவந்த

**"காணவில்லை"**

என்ற விளம்பரத்தினூடாக குறிப்பிட்ட நபரான

**"குகதாசன் நீபஜன்"**

தொடர்பான தகவலைத் தந்த
கொட்டக்கலையைச் சேர்ந்த

**இராமலிங்கம் கார்த்தீபன்**

என்பவருக்கு எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்வதோடு பல வகைகளிலும்
ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து
உள்ளங்களுக்கும் நன்றியினைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(cs.53859) (N-1)

குடும்பத்தினர்

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09.04.1940

சிவன் அடியில் 25.01.2006

### அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்

(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும், ஸ்தாபகர்– சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)

**திதி : அபரபக்க ஏகாதசி 06.02.2024**

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன் வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டுகிறோம்.

D.1/1, சென்றல் றோட்,
கொழும்பு - 12,
பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 . 05 . 1943



மறைவு 07 . 01 . 2024

### அமரர் கமலாதேவி பேரானந்தம்

திதி: அபரபட்ஷ துவாதசி

அன்பின் திருவருளான பாசமான அன்னையே!
நாட்கள் பல கடந்தாலும் மறப்போமா உம்
- நினைவுகளை
எமை எல்லாம் தவிக்கவிட்டு சுதனுடனே
- நல் வாழ்வு வாழசென்றீரே!
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
- வேண்டுகின்றோம்

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 12 . 1974



மறைவு 15 . 01 . 2004

### அமரர் பேரானந்தம் உமாசுதன் (போட்டோ சுதன்)

எம் குடும்பத்தில் வீசிய சுடர் விளக்கே!
ஆண்டு இருபதில் அம்மாவையும் உன்னுடன்
- அழைத்து சென்றதேனோ!
சுதன் இருந்தால் எனக்கொரு குறையுமில்லை
- எனக் கூறிய அன்னையை
இனி நீ கண்ணுக்குள் வைத்து பார்த்துக்கொள்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
- வேண்டுகின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(ne.26587) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1946



மறைவு 05 . 02 . 2024

### அமரர் காந்தி காந்திமதி

எழுவெட்டி, புலோலி மேற்கு, தம்பசிட்டி, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் காந்தி காந்திமதி அவர்கள் நேற்று (05.02.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.K.சுப்பிரமணியம் மணிமேகலை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வெற்றிவேலு காந்தி அவர்களின் அன்பு மனைவியும், கஜன், பிரியதர்சினி கிருபேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆராதனாவின் அன்புப் பாட்டியும், இந்துமதி விவேகானந்தன், சிவகாமசுந்தரி, நடராசா, சகுந்தலா, கனகரத்தினம், சாந்தகுமாரி சிறிஸ்கந்தன், சூரியகுமாரி சிவராசா, நவமணி சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2024) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எழுவெட்டி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
மகன்: 076 201 7291
சகோதரன்: 077 15[illegible] 7201

(C...1733) S-1

## 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர்

### இ.ச.பேரம்பலம்

E.S.P.

வாரிவளவு, காரைநகர்

திதி: துவாதசி : 06.02.2024



அன்பின் சிகரமே
அனுபவப் பெட்டகமே
பட்டறிவு தந்து
பார் போற்ற வாழவைத்தீர்
ஆலமரமாய் வேர் ஊன்றி
விழுது பரப்பி, ஊர்போற்ற
வணிகத்துறையில் வழிகாட்டி
வானுயர் தெய்வமானீர்
நீங்கள் மறைந்து 31 ஆண்டுகள்
ஆகின்றபோதும் உங்கள்
நினைவோடு வாழ்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
வாரிவளவு கற்பக விநாயகர்
பாதம் பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

கல்விக் காருண்யன்
கலாநிதி
E.S.P. நாகரத்தினம்
குடும்பத்தினர்
"மணி ஓசை"
383, கோவில் வீதி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்குச் சுதந்திரம்? மல்கம் ரஞ்சித் கேள்வி



கொழும்பு, பெப்.6

இலங்கையின் சுதந்திரதினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டநிலையில், சுதந்திரம் மக்களுக்கா? அரசியல்வாதிகளுக்கா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

பிரிட்டனிடமிருந்து விடுதலை யடைந்து 76 ஆண்டுகள் கழிந்துள்ளன. நாட்டின் மக்கள் பசியுடன் திண்டாடுகின்றனர். இந்த நிலைமையில் ஜனாதிபதியும், பிரதமரும் தாய்லாந்துப் பிரதமருடன் இணைந்து சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(எ-6)

## கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ செல்வ பால நர்த்தன விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7 மணி முதல் காலை 8.40 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும் என மேற்படி ஆலயத் தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ப-66)

**கட்டடம் வாடகைக்கு**

யாழ் / வைத்தியசாலை வீதியில் கட்டடம் வாடகைக்குண்டு.
கடைகள் / அலுவலகங்களுக்கு ஏற்றது.

**077 162 0626**

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 . 07 . 1942

இறப்பு 18 . 01 . 2023



திருமதி

**செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி**

(யா / வைத்தீஸ்வராக் கல்லூரி
முன்னாள் உப அதிபர் - B.A.Dip.in Edu)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறுமோ எம் துயரம்...

171 / B, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1944

மறைவு 05 . 02 . 2024



# பத்மராணி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - திரு / சென்ஜோசப் கல்லூரி, திரு / கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, யா/ நல்லூர் CC TMS, மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, திரு / மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் 902 A. பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மராணி சுப்பிரமணியம் நேற்று (05.02.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபா. சுப்பிரமணியம் (ஓய்வு நிலை மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாணம்) அன்பு மனைவியும், சுபத்திரா (நிறைவேற்று அதிகாரி Jaffna Air Services (Pvt) Ltd,) சுமத்திரா (ஆசிரியர் - யா/கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசீகரன் (மக்கள் தொடர்பு அலுவலகர், ஆளுநர் செயலகம், வட மாகாணம்), துஷியந்தன் (ஆசிரிய ஆலோசகர் - யாழ்.வலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புருஷோத், சஞ்ஜனா, தினூசனி, கவிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம் (துறைமுக மேற்பார்வையாளர் - கொழும்பு), சீவரட்ணம் (ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் - தென்மாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரி மற்றும் சந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

902 A, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(cs 53883) N-1

தகவல்:
குடும்பத்தினர்

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பேரம்பலம் கணேசலிங்கம் (E.S.P)

(உரிமையாளர், E.S.பேரம்பலம் அன் கம்பனி - கொழும்பு, யாழ்ப்பாணம்)
வாரிவளவு, காரைநகர்

**திதி: ஏகாதசி – 06.02.2024**

**தோற்றம்: 18.06.1964** **மறைவு : 23.01.2017**

பாசமிகு தந்தையே
நேசத்தின் இருப்பிடமே - எம்
நெஞ்சமெல்லாம் நிறைந்திருப்பவரே
வரமாக எமக்கு கிடைத்த தெய்வமே
வளமாக எமை காத்த தந்தையே
உம் நிமிர் நடையும் நேர் சிந்தனையும்
உறவுகளையும் ஊழியர்களையும்
கண்ணியத்துடன் நடத்தும் பாங்கும்
இனி எங்கு காண்போம்
கேட்பவருக்கு இல்லையென்னாது
அள்ளிக் கொடுத்த கொடை வள்ளலே
உம் ஈகைப் பண்பும் உயர்ந்த
- உள்ளமும்
யாரிடத்தும் காண முடியுமோ

பாரினிலே வாழ்வாங்கு வாழ்ந்து
வையகம் விட்டு வானுலகம்
- சென்றீர்
மனைவியையும் மக்களையும்
உம் கண்ணுள் கருத்தாய்
- பார்த்திருந்தீர்
எம் முகம் சுருங்க
உம் கண் கலங்குமே அப்பா
உம் பாசம் இழந்து தவிக்கிறோம்
தலைவனை இழந்த
- கன்றுகள் போல
உங்கள் ஆத்மா இறைவனிடத்தில்
சரணடைய எல்லாம் வல்ல
வாரிவளவு கற்பக விநாயகனை
வேண்டிக்கொள்கிறோம்.

இல.11, பெதெஸ்டா வீதி,
கொழும்பு - 05
"கணேசபவனம்"
வாரிவளவு, காரைநகர்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்.


(cr 41732) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கைதடி, ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் 64 ஆவது குருபூஜை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவ எழுச்சி விழா அருள்மிகு ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம நூல் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. தவத்திருவேலன் சுவாமிகள் முன்னிலையில் ஸ்ரீ சச்சிதானந்த அறக்கொடை நிலையக் கல்விப் பொறுப்பாளர் திருமதி கி. சிவலோஜினி மற்றும் செயலாளர் மு.பத்மரூபன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரை யாளரும் யாழ். போதனா மருத்துவமனை மகப்பேறு மருத்துவ நிபுணருமான மருத்துவர் கலாநிதி க.குருபரன், சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரார்வூட் ஹோட்டல் நிதி இயக்குநர் விக்கி சுப்பிரமணியம், கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் நீ.ஜெயரூபன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் லயன் ப.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-159)



93 ஆண்டுகள் பழைமையான ஊரெழு கணேச வித்தியாசாலையின் பிரதான மண்டபம் ஊரெழு அபிவிருத்திச் சங்கத்தின் 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படுகின்றது. (ச)



## டெங்கு விழிப்புணர்வு

ஜே/121 கொக்குவில் வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நல்லூர்ப் பிரதேச ஆயுர்வேத சமூக நலத்துறை மருத்துவர் கயாலினியால் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. (ப-66)

## நூல் வெளியீட்டு விழா



யாழ்.-வன்னி கோயில்கள் மீது பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் (கனடா) பாடிய பாடல்களின் தொகுப்பு நூலாகிய " 30 கோவில் நூல்கள்" வெளியீட்டு விழா கவிஞர். ஜோ. ஜேசு யுஜேனியன் ஒருங்கிணைப்பில் ஸ்கந்தபுரம் ஸ்ரீமுருகன் ஆலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கரைச்சி நிர்வாக கிராம அலுவலர் க.மகேந்திரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கிளிநொச்சி கல்வித் திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் ம.பத்மநாதன், கலைஞர்கள், கவிஞர்கள், பெரியார்கள், பக்தர்கள், பிரதேச மக்கள், நலன் விரும்பிகள்எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப)

## 76 ஆவது சிரார்த்த தினம்



கிளிநொச்சி, உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 76 ஆவது சிரார்த்த தினம் சங்கத்தலைவர் சோ.க. தம்பிப்பிள்ளை தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ப-159)



## உலருணவுப் பொதிகள்

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு பொங்கல் நிறைவையொட்டி, வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களின் நிதிப் பங்களிப்புடன் உரும்பிராய், ஞானவைரவர் அறக்கட்டளையினரால் , தலா 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ப-125)



கிளிநொச்சி மக்களுக்கு, மக்கள் விடுதலை முன்னணியினால் யாழ். மாவட்ட அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் சீன அரசாங்கத்தின் 150 நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சர் யாழுக்குப் பயணம்



யாழ்.பெப். 6
கல்வி அமைச்சர் கலாநிதிசுசில்பிரேமஜயந்த யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நேற்றுத் திங்கட்கிழமை உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டார். பல்வேறு நிகழ்வுகளிலும் அவர் பங்கெடுத்தார்.

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மத்திய அமைச்சின் உயர் அதிகாரிகள், மாகாண அமைச்சின் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலேயே குறித்த மீளாய்வுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களில் யாழ்.மாவட்ட மாணவர்கள், தரம் ஐந்து, சாதாரண மற்றும் உயர் தரங்களில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். வடக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

அதிபர்கள் நியமனத்தில் எழுந்துள்ள சிக்கல்கள், ஆசிரியர் இடமாற்றங்களில் காணப்படும் சிக்கல்கள், தளபாட வசதிகள் இன்மை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது தெளிவுபடுத்தினார்.

அத்துடன், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றையதினம் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு விஜயம் செய்திருந்ததுடன் அங்கு இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப பீடத்துக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் மேற்படி கல்லூரியின் தொழில்நுட்ப பீட வளாகத்தில் பதில் அதிபர் கே.குமணன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்விலும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொழில்நுட்ப பீடத்துக்கான புதிய கட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (ம-66)


## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மேரி ஜூலியா சூசைப்பிள்ளை தி.கு**

பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி ஜூலியா சூசைப்பிள்ளை தி.கு அவர்கள் கடந்த (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (06.02.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 27814) S-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 05 |
| 09 | 02 |
| 1947 | 2024 |



**யோகலிங்கம் சரஸ்வதி (அன்னக்கிளி)**

யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, குஞ்சுப்பரந்தன், உதயநகர் மேற்கு கிளிநொச்சி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட யோகலிங்கம் சரஸ்வதி (அன்னக்கிளி) அவர்கள் நேற்று (05.02.2024) திங்கட்கிழமை அமரத்துவமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை யோகலிங்கம அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற கந்தசாமி பரமேஸ்வரி, சிவபாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி - கிளிநொச்சி), சிங்கராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவா (அமெரிக்கா), சிவகலாநிதி (கொழும்பு இராமகிருஷ்ணா வித்தியாலயம்), சிவரஞ்சினி (அமெரிக்கா), சிவமதி (சுவிஸ்), சிவயோகச்செல்வன் (இலண்டன்), சிவசத்தியசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீபிரபாகரன் (இலண்டன்), சண்முகப்பிரியா (கனடா), கல்யாணி (மாதகல்) ஆகியோரின் பெரிய தாயாரும், ரேணுகா (அமெரிக்கா), மார்க்கண்டு (தேவன் - கொழும்பு), ஜோன்சன் (அமெரிக்கா), திரவியநாதன் (சுவிஸ்), நிலானி (இலண்டன்), அருள்மொழி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரங்கா, Dr. கீதாஞ்சன், கோபிதன், துவாரகன், துவாரகா (அமெரிக்கா), திலக்ஷன், கிஷாந்தி, திவ்யன் (சுவிஸ்), சஜீவனா, லோஜினா, சஞ்சிதன், கிர்ஷிகா (இலண்டன்), அனுஷா, லனுஷா, அனுஷன், பிரவீன், கவினயா (கனடா), சாங்கீதா, டனுஷிகா, நிஷாந்தன் (மாதகல்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திருப்புகழ் மண்டப வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41734) S-1

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 05 |
| 03 | 02 |
| 1941 | 2024 |



**அமரர் சிவசிதம்பரம் குகநேசன்**

(முன்னாள் பங்குதாரர் செட்டியார் கடை மாவடி, முன்னாள் நிர்வாகஸ்தர், பொருளாளர் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவில், செயலாளர், வட்டுக்கிழக்கு முதியோர் சங்கம்)

வட்டுக்கோட்டை மாவடிச்சந்தியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கந்தமுத்து சிவசிதம்பரம் குகநேசன் அவர்கள் 05.02.2024 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தமுத்து நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் (செட்டியார்/தெய்வேந்திரம்), அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (சட்டத்தரணி), பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், தனலக்சுமியின் பாசமிகு கணவரும், அச்சுதன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் இலங்கை வங்கி, சங்கானை), குகதாசன் (ஆசிரியர், யா/அராலி இந்துக்கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மீனாம்பாள், சிவலோகநாதன், இராசேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற திருஞானம் மற்றும் தவனேஸ்வரி, செல்வராணி காலஞ்சென்ற நடராசசிங்கம் மற்றும் இராசேஸ்வரி தவராசசிங்கம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் கேதீஸ்வரநாதன், சிவநேசன் காலஞ்சென்றவர்களான தில்லையீசன், ஞானம்பிகை, சிதம்பரநாதன் மற்றும் கனகநாயகம் காலஞ்சென்ற தையல்நாயகி மற்றும் வைத்தியநடன் சிவகுமார், சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் நாகேஸ்வரி (ஆசிரியர், யா/காரை சுப்பிரமணிய வித்தியாசாலை), பாமதி (ஆசிரியர் யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வராகன், வாணிஷா, ஆருஷ் ஆகியோரின் பாசமிகு பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் மாதாங்கோவிலடி அராலியிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 670 1126, 077 172 7868


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனெடுக்கச் சென்றவர் பன்றிவெடியில் பலி!

முல்லைத்தீவு, பெப். 6

பன்றிக்கு வைத்த வெடியில் சிக்கி குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். பழனி வடிவேல் (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிலருடன் இணைந்து தேன் எடுப்பதற்காகச் சென்றவரே பன்றிக்கு வைத்த வெடியில் சிக்கியுள்ளார். அவர் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-113)

# கட்டுமானப் பணியின்போது தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

கட்டுமானப் பணிகளின்போது, தவறி வீழ்ந்த தொழிலாளி உயிரிழந்தார். சூசை சுதர்சன் (வயது-38) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இளவாலையைச் சேர்ந்த மேற்படி நபர், கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற கட்டுமானப் பணிகளுக்காகச் சென்றுள்ளார். இரண்டாம் மாடியில் கட்டுமானங்களை மேற்கொண்டிருந்தபோது பலகையொன்று கழன்று வீழ்ந்துள்ளது. பலகையைப் பிடிப்பதற்காக முயன்றவேளை அவர் தவறி வீழ்ந்துள்ளார்.

மூச்சற்ற நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

# இந்திய மீனவர்கள் கைதாகுவது ஏன்?

## இந்திய மத்திய அரசிடம் உயர்நீதிமன்றம் கேள்வி

சென்னை, பெப். 6

இந்திய மீனவர்கள் எதற்காக இலங்கைக் கடற்படையால் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்படுகின்றனர்? என்று இந்திய மத்திய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளது சென்னை உயர் நீதிமன்றம்.

கச்சதீவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராக, மீனவர் பாதுகாப்பு அமைப்பினரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்திய மத்திய அரசின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, "இந்த விவகாரத்தில் இந்திய அரசாங்கம் தூதரக அளவில் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே இந்த வழக்குத் தொடர்பாக விளக்கமளிக்க காலஅவகாசம் வேண்டும்" என்று தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரணைக்கு உட்படுத்திய நீதிபதிகள், 'மீனவர்கள் கைது நடவடிக்கை என்பது தொடர் நிகழ்வாக இருக்கிறது. இதைத் தடுக்க ஏன் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்கின்றன?' என்று கேள்வி எழுப்பினர். இந்தக் கேள்விகளுக்கு மத்திய, மாநில அரசுகள் விளக்கமளிக்கவேண்டும் என்று தெரிவித்து வழக்கை மார்ச் மாதம் 11ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர். (அ-ம)



யாழ். மாவட்ட 'அமரா சமாசம்' மற்றும் யாழ். மாவட்ட பெண்கள் சமாசம் ஆகியன ஒன்றிணைந்து நடத்திய தைப்பொங்கல் நிகழ்வு திருநெல்வேலியில் அமைந்துள்ள விழுது நிறுவனத்தின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சமாச உறுப்பினர்கள், அமரா உறுப்பினர்கள், விழுது நிறுவன உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ப-159)

### விபத்தில்...

சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் மருத்துவர் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100)

### பிணை!...

யில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான சாரதி வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நேற்றுத் திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ம)

### சபாநாயகர்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

"சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஓர் அரச அதிகாரிபோலவே செயற்பட்டு வருகின்றார். இதற்கு முன்னர் இருந்த சபாநாயகர்கள் அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரமாகவே செயற்பட்டுள்ளனர். தற்போதைய சபாநாயகரின் அணுகுமுறையால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படக்கூடும்.

அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்குப் புறம்பாகச் சென்றே நிகழ்நிலைக்காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் கையொப்பமிட்டு சபாநாயகரும் அதில் பங்காளியாகியுள்ளார். இதனை அனுமதிக்கமுடியாது. இதுவிடயத்தில் கண்டும், காணாமல் போல் இருப்பது துரோகமான நடவடிக்கையாகவே அமையும். எனவேதான் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தோம். ஆனால் 113 எம்.பி.க்கள் அவரை பாதுகாத்தனர். இன்று என்ன நடந்துள்ளது? கெஹலிய மட்டும் அல்ல, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர்களும் மருந்துப் பொருள்கள் இறக்குமதியில் இடம்பெற்ற மோசடிகளுக்குப் பொறுப்புக்கூறவேண்டும். சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்திலாவது எம்.பி.க்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்" - என்றார். (அ-ம-44)

### அடக்குமுறைக்...

கிளிநொச்சியில் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் தாக்குதல்களைக் கண்டித்து வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் அநீதிகளையும், உரிமைமீறல்களையும், வடக்கு - கிழக்கிலே இடம்பெறும் சிங்கள - பௌத்த மயமாக்கலையும் கண்டிக்கும் வகையிலும், தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்னிறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும், வடக்கைச் சேர்ந்த பல சமூக அமைப்புகளும் சேர்ந்து நேற்றுமுன்தினம் இலங்கையின் 76ஆவது சுதந்திரதினத்தன்று கிளிநொச்சியிலே அமைதிவழிப் போராட்டம் ஒன்றிலே ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதல்களிலே நீர்த்தாரைகளும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. மாணவர்களை இழுத்தும், தள்ளியும், நிலத்தில் வீழ்த்தியும் பொலிஸார் மிகவும் மோசமான முறையில் செயற்பட்டிருக்கின்றனர். போராட்டத்திலே பங்குபற்றிய மாணவர்களில் சிலர் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைகள், இலங்கையில் சுதந்திரதினத்தன்று கூட அங்கு வாழும் தமிழ் மக்களுக்குச் சுதந்திரமாக ஒன்றுகூடவும், தமது உரிமைகளை வலியுறுத்திப் போராடவும் சுதந்திரம் இல்லை என்பதனையே உலகுக்கு வெளிக்காட்டியது.

போராட்டங்களை நசுக்குவதன் மூலம் தன்னுடைய இருப்பினைத் தக்க வைக்க முடியும் என இந்த அரசாங்கம் கருதுகிறது. மக்களின் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான சுதந்திரம் என்பவற்றைச் சட்டங்கள் மூலமும், கொடூர வன்முறை மூலமும் அரசு பறித்து வருகிறது. இந்தச் செயன்முறைகளினதும், சிங்கள - பௌத்தப் பெரும்பான்மைவாதத்தினதும் ஒரு வடிவமே போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை - என்றுள்ளது. (அ-ம)

### அநுர...

2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு மற்றும் அரசியல் குழப்பங்களைத் தொடர்ந்து அநுரகுமார மாற்றுத்தலைவராக உருவெடுத்து வருகின்றார் என்று நிபுணர்கள் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்த வருடம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களின் விருப்பத்துக்குரிய வேட்பாளராகவும் அநுர இருப்பது அண்மையில் இடம்பெற்ற கருத்துக்கணிப்பில் தெரியவந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் அநுரவையும் அவர் குழுவினரையும் அழைத்துப் பேச்சு நடத்தியுள்ளது இந்தியா.

இடதுசாரித் தலைவரான அநுரவை இந்தியா அழைத்துப் பேச்சு நடத்தியமையானது மிக அரிதான சம்பவமாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம-6)

### பொலிஸார்...

வட்டுக்கோட்டை, மாவடிப் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னை வழிமறித்து, தான் மறிக்கும் போது ஏன் மோட்டார்ச் சைக்கிளை நிறுத்தவில்லை? என தன்னுடன் முரண்பட்டதாகவும், "நீங்கள் மறித்ததை நான் கவனிக்கவில்லை" என்று தெரிவித்த பின்னர் அந்த பொலிஸ் அலுவலர் வேறு சிலருடன் இணைந்து தன்னைத் தாக்கினார் என்றும், அதன் பின்னர் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றும் தன்னைத் தாக்கினரெனவும், தாக்குதலைத் தாங்கமுடியாமல் தான் தப்பி வந்ததாகவும் மேற்படி இளைஞர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். தற்போது குறித்த இளைஞர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-ம-66-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தகாடு மறுவாழ்வு முகாமில்

# சண்டித்தனம் தொடர்ந்தால் சிறைக்குள் அடைக்கப்படுவர்

## நீதி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.6

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் வன்முறையில் ஈடுபடும் கைதிகள், புனர்வாழ்வுத் திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த சில காலப்பகுதியில் பல மோதல் சம்பவங்கள் பதிவாகின. இரண்டாவது தடவை புனர்வாழ்வுபெறவரும் தரப்பினர் ஏனைய தரப்பினர் மீது தாக்குதல் நடத்துவதால் இந்தநிலைமை ஏற்பட்டிருந்தது.

'யுக்திய' நடவடிக்கையால் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. போதைப்பொருள் வியாபாரிகள் உள்ளே வந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நிர்வாகத்திலும் நாம் மாற்றத்தை ஏற்படுத்திப் பார்த்தோம். எனினும், புனர்வாழ்வு நிலையத்தில் வன்முறையைத் தூண்டும் விதத்தில் செயற்பட்டால் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு தடுத்து வைக்கப்படுவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## சொற்பொழிவு

நீர்வேலி, பெப்.6

அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாசா மண்டபத்தில் எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து இளஞ்சைவப்புலவர் ச. நவநீதனின் 'அபிராமி என்னும் அருமருந்து' என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும், சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

▣ ▣ ▣ ▣ ▣ ▣

தெல்லிப்பழை, பெப்.6

தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 44 (முனையாடுவார் நாயனார் ) எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து இளஞ்சைவப்புலவர் க. கயிலை வாசன் 'போரில் வென்று கிடைக்கும் பணத்தை சிவனடியார்க்குக் கொடுத்துத் திருத்தொண்டு செய்த நாயனார்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ப)

## மரம் வீழ்ந்து பாலகன் பலி!

### மேலும் ஒருவர் கவலைக்கிடம்

கொழும்பு, பெப். 6

கண்டி மாவட்டத்துக்குட்பட்ட கம்பளை நகரில் உள்ள சர்வதேச பாடசாலையொன்றின் வளாகத்தில் பெரியதொரு மரமொன்றின் கிளையொன்று முறிந்து விழுந்ததில் மொஹமட் அஸ்வி என்ற 5 வயது பாலகன் ஒருவன் பலியாகியுள்ளான்.

நேற்று முற்பகல் 10.45 மணியளவிலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது. படுகாயம் அடைந்த மேலும் இரு மாணவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்பறையொன்றில் இருந்த சுமார் 31 குழந்தைகள் பாடசாலை வளாகத்தில்விளையாடிக்கொண்டிருந்துள்ளனர். அவ்வேளையிலேயே பக்கத்து காணியில் இருந்த மரமொன்றின் கிளை திடீரென முறிந்து விழுந்து இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. (ம-44)

## மன்னர் சார்ள்ஸுக்கு புற்றுநோய்

லண்டன், பெப். 6

இங்கிலாந்து மன்னர் சார்ள்ஸுக்குப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சைகள் தொடங்கியுள்ளன என்று பக்கிங்காம் அரண்மனை நேற்று மாலை அறிவித்துள்ளது.

மன்னர் சில தினங்களுக்கு முன்னர் புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்துக்காகச் சிகிச்சை பெற்ற சமயத்திலேயே அவருக்குப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அவருக்கு எவ்வகையான புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (ம)

**பலசரக்குக்கு கடைக்கு தேவை**

ஆண் உதவியாளர்கள் எங்கள் பலசரக்கு கடைக்கு தேவை. மாதத்திற்கு 35000/= சம்பளம் வழங்கப்படும். (உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு:

S.A.W & Sons, Hambantota 077 480 3379

**மலிவு விற்பனைக்கு**

பாடசாலை மாணவர்களுக்கான தரமான காலுறைகள் (Socks)

076 315 6470

**வீட்டுப்பணிபெண் தேவை**

யாழ்நகரில் தங்கி நின்று வீட்டு வேலை, குழந்தை பராமரிப்பதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

வயது எல்லை - 30 - 60

077 967 2643

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A-9 வீதி கைதடி சந்திக்கு அருகாமை.

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்
- வட மாகாண சபை 300 மீற்றர்
- கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

(KS 27817) V-1

தொடர்பு: 071 173 3911
076 853 5022

**பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் : 15.03.1936 மறைவு : 20.01.2012

மீசாலை

அமரர் திருமதி **புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**

(இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்- தென்மராட்சி வலயம்)

திதி: அபரபக்க துவாதசி

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் பன்னிரண்டாகி தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை.

72/27. பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(cs28012) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.